# தொடக்கநிலை 1

# 2024



# தமிழ்மொழிப் பாடக் கலைத்திட்டத்தின் நோக்கங்கள்

- ஒவ்வொரு பிள்ளையும் தாய்மொழியை விரும்பிக் கற்றுப் பயன்படுத்தி அதனை வாழும் மொழியாக்க உதவ வேண்டும்.
- இயல்பான பல்வேறு வாழ்க்கைச் சூழல்களில் மொழியைத் திறம்படப் பயன்படுத்தி பன்முனைப்புடன் கருத்துப் பரிமாறிக் கொள்பவர்களாகவும் உருவாக வேண்டும்.

# கேட்டலும் பேசுதலும்

- கேட்டலும் பேசுதலும் மொழிக் கற்றலுக்கு அடிப்படை
- இவற்றை வளர்க்க உற்சாகமூட்டும் நடவடிக்கைகளும் தொழில் நுட்பமும் செம்மையாகப் பயன்படுத்தப்படும்.

# பேச்சுவழிக் கருத்துப் பரிமாற்றம்

- பேச்சுவழிக் கருத்துப் பரிமாற்றத் திறனை வளர்க்க வாய்ப்புகள் பல வழங்கப்படும்.

# படித்தல்

- தன்னம்பிக்கையுடன் மொழியைப் பேசவும் எழுதவும் சொல்வளத்தைப் பெருக்கிக் கொள்ளவும் படித்தல் திறன் அவசியம்.

# எழுதுதல்

- முதலில் எழுத்துகளின் வரிவடிவங்களை முறையாக எழுதக் கற்றுக்கொள்வர்.
- தொடர்ந்து சொற்களை, சொற்றொடர்களை, வாக்கியங்களை எழுதப் பயிற்சி பெறுவர்.
- படிப்படியாகத் தங்கள் எண்ணங்களுக்கு எழுத்துவடிவம் கொடுக்க கற்றுக்கொள்வர்.

# தகவல் தொடர்புத் தொழில்நுட்ப வளங்கள்

- தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் கூடுதல் பயன்பாடு மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டி அவர்களைக் கற்றலில் ஈடுபடுத்தும்.

# 21-நூற்றாண்டுத் திறன்களும் விழுமியங்களும்

- பெரிய புத்தகங்கள், சிறுவர் கதைநூல்கள் படக் கதைகள் ஆகியவற்றின்வழி விழுமியங்களும் இருபத்தோராம் நூற்றாண்டுத் திறன்களும் வளர்க்கப்படும்.

# மின்னட்டைகளும் பட அட்டைகளும்

துடிப்புமிக்க கற்றல் சூழலை உருவாக்கவும் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபடவும் பட அட்டைகள், மின்னட்டைகள் முதலிய வளங்களும் பயன்படுத்தப்படும்.

# ஆர்வமூட்டும் மொழிவள நடவடிக்கைகள்

# ஆர்வமூட்டும் மொழிவள நடவடிக்கைகள்

- கற்றலில் ஆர்வத்தைத் தூண்டப் பல்வேறு ஆர்வமூட்டும் கற்பித்தல் உத்திகள் பயன்படுத்தப்படும்; பிள்ளைகள் பல மொழிவள நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவர்.

# அன்றாடச் சூழலில் மொழி கற்றல்

- அன்றாட வாழ்க்கையில் தமிழ்மொழியைச் செம்மையாகப் பயன்படுத்த ஊக்கமூட்டும் வகையில் பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

- பெற்றோர்களையும் பிள்ளைகளின் கற்றலில் ஈடுபடுத்தும் வகையில் பல நடவடிக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

# 2024 தொடக்கநிலை 1 பாடப் புத்தகம்



# இன்பத்தமிழ்

நடப்பிலிருக்கும்
பயிற்றுவளங்களில்
காணப்படும்
சிறப்புக் கூறுகள்
புதிய
பயிற்றுவளங்களிலும்
தொடரும்



# எழுத்து அறிமுகம்

| 1A | | | 1B | | |
|---|---|---|---|---|---|
| த1 | 1 | கருத்துப்பரிமாற்றம் | த3 | 1 | பாடத்திருப்பம் – அகர, ஆகார வேறுபாடு |
| | 2 | ட், ட, டா, ப், ப, பா, ம், ம மா | | 2 | இ |
| | 3 | ர், ர, ரா, ச், ச, சா | | 3 | இகர உயிர்மெய் |
| | 4 | க் , க, கா | | 4 | இகர உயிர்மெய் |
| | 5 | த். த, தா ந், ந, நா | | 5 | இகர உயிர்மெய் |
| | 6 | வ், வ, வா | | 6 | இகர உயிர்மெய் |
| | 7 | அ, ஆ | | 7 | ஈ |
| த2 | 8 | ன், ன, னா | த4 | 8 | ஈகார உயிர்மெய், இகர-ஈகார வேறுபாடு |
| | 9 | ண், ண, ணா | | 9 | உ |
| | 10 | ல், லா, ல | | 10 | உகர உயிர்மெய் |
| | 11 | ள், ள, ளா, ழ், ழ, ழா | | 11 | உகர உயிர்மெய் |
| | 12 | ய், ய, யா, ங், ங, ஙா | | 12 | உகர உயிர்மெய் |
| | 13 | ஞ், ஞ, ஞா, ற், ற, றா | | 13 | உகர உயிர்மெய் |


சைமன்
சலீம்
மெய் லீ
வான்மதி
மதிவாணன்
மகிழ்வுறக் கற்று மொழியைத்
தன்னம்பிக்கையோடு பயன்படுத்துபவர்


ஆற்றங்கரை ஓரம் பெரிய தோட்டம் இருந்தது. அங்குக் குரங்கு, முயல், அணில் ஆகியவை ஓடிப்பிடித்து விளையாடின.
அப்போது ஏதோ ஒன்று பறந்து வந்தது...
அங்கே பாருங்கள்!
ஒவ்வொரு பாடமும் கதையுடன் தொடங்கும்.
2
3




மாணவர்களது
பேசுதல், சிந்தித்தல்,
படித்தல் திறன்களை
வளர்க்கவும்
வலுப்படுத்தவும்
உரையாடல்வழிப்
படித்தல் என்னும்
அணுகுமுறை
வலியுறுத்தப்படுகிறது.

21-ஆம் நூற்றாண்டுத் திறன்கள், தம் இன - பல்லினப் புரிந்துணர்வுத் திறன்கள், நுண்ணாய்வுத்திறன், புத்தாக்கத்திறன் ஆகியவை வலியுறுத்தப்படும்.






பல்வேறு பாங்குகள் கொண்டமைந்த
கற்றலின் வாயிலாக மாணவர்கள்
தங்கள் மொழித்திறன்களை
வளர்த்துக்கொள்ளும் வகையில்
பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.










**மாணவர்களின் வாழ்க்கையோடு தொடர்புடைய சூழல்களைப் புதிய பயிற்றுவளங்களில் காணலாம்.**

விளையாட்டுவழிப்
பாடத்தை வழிநடத்தி
மகிழ்வுறு கற்றல்
அனுபவத்தை வழங்கும்
வகையில் பயிற்றுவளங்கள்
வடிவமைக்கப்பட்டுள்ளன.



தகவல் தொடர்புத்
தொழில்நுட்பத்தின்
உதவியுடன்
மேற்கொள்ளப்படும்
நடவடிக்கைகள்
மாணவர்களைப் பெரிதும்
கவர்ந்து அவர்களுக்கு
உள்ளார்ந்த ஊக்கத்தையும்
தன்னார்வத்தையும்
அளிக்கும்.













மாணவர்கள் கற்றலில் தங்கள் நிலைகளைப் புரிந்துகொள்ளவும் தங்கள் கற்றலை மேம்படுத்திக்கொள்ளவும் தகவல் தொடர்புத் தொழில்நுட்ப வளங்கள் உதவும்.



பேசுதல் திறனைக்
கைவரப்பெற
அசைவுப்படக் காட்சிகள்
Ministry of Education


உச்சரிப்புப் பயிற்சிக்கு மின்னிலக்க அட்டைகள்
ப
00:04.86
பட்டம்
00:13.06


சுய
கற்றலுக்குத்
துணைபுரியும்
ஒலிக்கோல்
ஒலிக்கோல்

# பெற்றோர்களின் கவனத்திற்கு

- உங்கள் குழந்தைகள் பள்ளியில் என்ன கற்கிறார்கள் என்பதில் ஆர்வம் காட்டுங்கள். அவர்களுடன் அதைப் பற்றி உரையாடுங்கள். இது உங்கள் குடும்பப் பிணைப்பை வலுப்படுத்த உதவும்.
- நூலகத்துக்கு அழைத்துச் சென்று தமிழ் புத்தகங்களை வாசித்துக் காட்டலாம்.
- தரமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து பார்த்து மகிழலாம். விளம்பரங்கள் சொல்லும் கருத்துகளை அவர்களுக்கு எடுத்துக் கூறலாம்.
- பிள்ளைகளுடன் வெளியே செல்லும்போது சுற்றுப்புறத்தில் இருக்கும் பொருட்களைப் பற்றிப் பேச முயலலாம்.




# நன்றி